பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 09 புதன்கிழமை 22.01.2025 | அதிர்வு 174


## நிமோனியாக் காய்ச்சலால் யாழில் 4 வயது சிறுமி சாவு!

நிமோனியா காய்ச்சல் காரணமாக 4 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளது.

புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிறுமி கடந்த சில 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அரசியல் கைதிகளை உடனே விடுவியுங்கள்

## அநுர அரசிடம் சஜித் அணி இடித்துரைப்பு

“அரசியல் கைதிகளை மிக விரைவில் விடுதலை செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

- இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. ஊடகங்களிடம் மேலும் கூறியதாவது:-

“சிறைச்சாலைகளில் தற்போது குறைந்தளவு அரசியல் கைதிகளே உள்ளனர் 03



# உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கு எதிரான மனு வெள்ளி விசாரணைக்கு

அரசால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான சட்டமூலத்தின் சில ஏற்பாடுகள் அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 03



# வவுனியா மாவட்டத்தில் மீண்டும் கன மழை! 20 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் பாதிப்பு!!

(கி.வசந்தன்)

வவுனியாவில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கன மழையால் 20 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தமது இருப்பிடங்களில் இருந்தும் வெளியேறியுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு நிலை காரணமாக வவுனியாவில் தொடர்ச்சியாக கன மழை பெய்து வருகின்றது. இதனால் வவுனியா மாவட்டம் தழுவிய ரீதியில் இடர் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் பல வீடுகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அந்தவகையில், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நெளுக்குளம் பகுதியில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் பீடியாபாம் பகுதியில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேரும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மத்திய நீர்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள பாவற்குளம், இராசேந்திரங்குளம், ஈரப்பெரியகுளம், முகத்தான்குளம், மருதமடுக்குளம் மற்றும் கல்மடு அணைக்கட்டு என்பன நீர் வரத்து அதிகரித்தமையால் தொடர்ந்தும் வான் பாய்ந்து வருகின்றன.

இதனால் இதன் கீழ்ப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.



# பாடசாலை மாணவி வானில் கடத்தப்பட்ட சம்பவம்: பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி இடைநிறுத்தம்!

கண்டி, கம்பளை, தவுலகல பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் வானில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கத் தவறிய குற்றச்சாட்டில் தவுலகல பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். அத்துடன் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவ தினத்தன்று கடமையில் இருந்த மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர், கடுகண்ணாவை பொலிஸ் நிலையத்துக்கும், குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாகச் செயற்பட்ட உப பொலிஸ் பரிசோதகர், வேலம்பொடை பொலிஸ் நிலையத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாணவி கடத்தப்பட்ட தினம், சம்பவம் இடம்பெற்ற பகுதி ஊடாகப் பயணித்த கம்பளை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தவுலகல பொலிஸாருக்கு அறிவித்த போதும், கடமையில் இருந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியா மாவட்ட சமாதானப் பேரவையின் பொங்கல் விழா

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட சமாதானப் பேரவையின் பொங்கல் விழா மூன்று முறிப்பு பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி வளாகத்தில் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

இதன்போது, முன்பள்ளி மாணவர்களினால் தமிழர் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பல கலை நிகழ்வுகளும், நடனங்களும் நடைபெற்றன.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட சர்வ மதப் பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். விக்கினேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பொங்கல் நிகழ்வில் கத்தோலிக்க, இந்து, பௌத்தம், இஸ்லாம் மதத் தலைவர்கள் கலந்துகொண்டதுடன், தமிழ், சிங்கள, கிறிஸ்தவ, இஸ்லாமிய முன்பள்ளி மாணவர்களால் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது பொங்கல் தினத்தை முன்னிட்டு பரிசுப் பொருட்களும் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன. இதில் மதத் தலைவர்கள், வவுனியா மாவட்ட சமாதான பேரவையின் அங்கத்தவர்கள், எப்.ஐ.ஆர்.எம். நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### உள்ளூராட்சி...

இந்த மனு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த மனு இன்று புதன்கிழமை நீதியரசர்களான யசந்த கோதாகொட, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் தலைமையிலான நீதியரசர்கள் மூவரடங்கிய உயர் நீதிமன்ற குழாமின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகக் கோரப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் நோக்கத்துடன் அரசு இந்தச் சட்ட மூலத்தை சமர்ப்பித்துள்ளது என்று மனுதாரர் தெரிவித்துள்ளார்.

உத்தேச சட்டமூலத்தில் உள்ள சில ஏற்பாடுகள் மக்களின் வாக்குரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் என்றும், மேலும் சில ஏற்பாடுகள் அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ளன என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறித்த சட்டமூலத்தில் உள்ள கேள்விக்குரிய ஏற்பாடுகளை நிறைவேற்றப்பட வேண்டுமானால், அவற்றை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு, சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

### நிமோனியா...

தினங்களாகக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார்.

அவ்வேளை சிறுமியை அவரது பெற்றோர் கொக்குவில் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றுக்குக் கொண்டு சென்றபோது, அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, கடந்த திங்கட்கிழமை சிறுமிக்குக் கடும் சுகவீனம் ஏற்பட்ட நிலையில், பெற்றோர் புங்குடுதீவு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அவ்வேளை, சிறுமி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்து அறிக்கையிட்டுள்ளனர்.

அதனையடுத்து, சிறுமியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் நிமோனியா காய்ச்சல் காரணமாகவே சிறுமி உயிரிழந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### அரசியல் கைதிகளை...

என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளார்கள். எனவே, அவர்களை இந்த அரசு விடுதலை செய்ய எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி தமிழ் மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு எமது கட்சியின் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றோம்." – என்றார்.




# வெள்ளவத்தையில் பெண் கடத்தப்பட்ட சம்பவம்: முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது

வெள்ளவத்தைப் பகுதியில் பெண் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 18 ஆம் திகதி திகதி வெள்ளவத்தையில் உள்ள தனியார் வைத்தியசாலை விடுதிக்கு வெளியே பெண் ஒருவர் வான் ஒன்றில் கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட பெண்ணிடம் இருந்து 31 ஆயிரத்து 500 ரூபா மற்றும் பிற பெறுமதியான பொருட்களைக் கொள்ளை அடித்துக்கொண்டு வெலிக்கடையில் பெண்ணைக் கடத்தல்காரர்கள் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்த கடத்தல் சம்பவம் தொடர்பான காணொளி சமூக ஊடகங்களில் பரவி வருகின்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் முன்னர் பொலிஸ் பிரிவில் கடமையாற்றி சேவையிலிருந்து பணி இடைநிறுத்தப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# கொழும்பில் தமிழ் மாணவன் சடலமாக மீட்பு!

கொழும்பு மாவட்டம், கெஸ்பவை பிரதேசத்தில் தமிழ் மாணவன் ஒருவர் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


கொழும்பு நகர் பாடசாலையொன்றில் உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கல்வி கற்கும் 18 வயதுடைய மாணவனே தனது வீட்டில் தூக்கில் தொங்கியவாறு நேற்று செவ்வாய்க் கிழமை இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



யோகேந்திரன் முகுந்தன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடும்பத்தினருடனான முரண்பாடு காரணமாக மேற்படி மாணவன் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்திருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# மருதானை பொலிஸ் சிறைக்கூண்டில் வவுனியா பெண் ஒருவர் உயிர்மாய்ப்பு

கொழும்பு, மருதானை பொலிஸ் நிலையத்தின் சிறைக்கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று செவ்வாய்க்கிழமை மருதானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தின் சிறைக்கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்துள்ளார்.

இதன்போது, இந்தப் பெண் இன்று அதிகாலை 4 மணியளவில் பொலிஸ் நிலையத்தின் சிறைக்கூண்டினுள் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பொத்துவிலுக்குப் பிரதேச செயலாளர் ஒருவரை உடனடியாக நியமிக்கவும்!

## உதுமாலெப்பை எம்.பி. கோரிக்கை

**(அபு அலா, எஸ்.எம்.முபீன்)**

பொத்துவில் பிரதேச செயலாளர் வெற்றிடம் கடந்த 7 மாத காலமாக நிரப்பப்படாமல் உள்ளது. இதனால் அப்பிரதேச மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப் பிரதேச செயலகத்துக்கு நிரந்தர பிரதேச செயலாளர் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, பொது நிர்வாக உள்நாட்டு அலுவலகங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டாரவை நேரடியாக அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் அப்பிரதேச மக்கள் பல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வந்துள்ளனர். இன்னும் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதென்றால் நிரந்தரமான பிரதேச செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

பொத்துவில் பிரதேச செயலாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு அம்பாறை மாவட்ட செயலாளரால் சிபாரிசு செய்தும் இதுவரையும் பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு செயலாளர் நியமனம் செய்யப்படவில்லை என்ற விடயத்தையும் அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டாரவிடம் எடுத்துரைத்தார்.

பொத்துவில் பிரதேச செயலகத்துக்கான நிரந்தர பிரதேச செயலாளர் ஒருவரை மிக விரைவில் நியமிப்போம் என்ற உத்தரவாதத்தைப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவலகங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் பொது நிர்வாக அமைச்சின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் எஸ்.வீரசிங்க, மேலதிக செயலாளர் திருமதி ஆர்.எம்.என்.ஈ.கே.ரணசிங்க, பொது நிர்வாக அமைச்சின் பொதுப் பணிப்பாளர் பொறியியலாளர் யூ.எல்.ஏ.நசார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மட்டு. தாண்டியூர் சித்திரவேலாயுதர் ஆலய 1008 சங்காபிஷேகமும் பாற்குட பவனியும்!

**(மட்டு. துஷாரா, அபு அலா)**

மட்டக்களப்பு, தாண்டியூர் ஸ்ரீ சித்திர வேலாயுதப் பெருமான் ஆல யத்தின் 1008 சங்காபிஷேகமும் பாற் குட பவனியும் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற வுள்ளன.

காலை 8 மணி தொடக்கம் 12 வரையுள்ள சுபநேரத்தில் முருகப் பெருமானுக்கு 4 ஆவது 1008 மஹா சங்காபிஷேகமும், பாற்குட பவனியும் இடம்பெறவுள்ளன.

கரையாக்கன்தீவு அருள்மிகு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் இருந்து காலை 8 மணியளவில் பாற்குடப்பவனி எடுத்துவரப்படும் என்றும் பாற்குடம் எடுக்க விரும்பும் அடியார்களும், பெருமானின் சங்காபிஷேகத்துக்கு உபயம் பண்ண விரும்புவோரும் தங்களது பெயர் விவரங்களை முன்கூட்டியே ஆலய பரிபாலன சபையினரை தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம் பெருமானின் பாற்குட பவனிக்கு தேவையான பாலை வழங்க விரும்புவோர் முதல் நாள் ஆலயத்தில் வழங்கலாம் என்று தாண்டியடி சித்திரவேலாயுத பெருமான் ஆலய சங்காபிஷேக பிரதம குரு இரா. திருக்கேதீஸ்வரன் சுவாமி அகோர சிவாச்சாரியார் கேட்டுக்கொண்டுள்ளார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உண்டியல் முறைமை

பலம் பொருந்திய புலம்பெயர் சமூகத்தவர்களைக் கொண்ட ஒரு சமூகக் கட்டமைப்பாக இலங்கைத் தமிழினம் இங்கு நிலை பெற்றுள்ளது. ஈழத் தமிழர்களினுடைய அன்றாட வாழ்வியலில் புலம்பெயர் சமூகம் மூலம் கிடைக்கும் வாழ்வாதாரங்கள், உதவிகள், வருமானங்கள் காத்திரமானவை.

யுத்த நெருக்கடியை ஒட்டி இலங்கை அரசு தமிழர் தேசத்தின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து, கடும் நெருக்குவாரத்திற்குள் அவர்களைத் தள்ளிய சமயத்திலும் கூட அந்தக் கட்டுப்பாடுகளுக்கு முகம் கொடுத்து, ஈழத் தமிழினம் தன்னை சமாளித்து நின்றதற்கு புலம்பெயர் தேசத்தில் இருந்து கிடைத்த தடையற்ற உதவிகள், வருமானங்கள், வாழ்வாதாரங்கள் போன்றவை முக்கிய காரணங்களாக அமைந்தன.

இலங்கையைப் பொறுத்தவரை பலம் பொருந்திய புலம்பெயர் சமூகமாக இருக்கும் ஈழத் தமிழர்கள் தாயகத்தில் உள்ள தங்கள் உறவுகளுக்கும், தங்கள் நடவடிக்கைகளுக்கும் நிதியை அனுப்பி வைக்கும் முறைமையில் இலங்கையின் வங்கி கட்டமைப்புகளுக்கு அப்பால் உண்டியல் மற்றும் ஹவாலா முறைகள் காத்திரமான - வலிமையான - பங்கை வகிக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

ஒரு வகையில் இத்தகைய நிதி பரிமாற்றம் சட்ட ரீதியானதாக இல்லாவிடினும், தனிப்பட்ட நம்பகத்தன்மைகள், சட்ட நெருக்கடியின்மை, குறைந்த தரகுக் கட்டணம், விரைந்த பணப்பரிமாற்றம் என்ற பல்வேறு காரணங்களினால் இந்த உண்டியல் முறை இங்கு தடுக்க முடியாத ஒரு விவகாரமாக தொடர்ந்து செயற்பாட்டில் தங்கு தடையின்றி நீடிக்கின்றது.

வங்கி விதிமுறைமைகளுக்கு மாறான இந்த உண்டியல் முறைமையினால் அரசு தான் எதிர்பார்க்கும் அந்நிய செலாவணி ஈட்டம், வரி வருமானம் என்பனவற்றைப் பெருமளவில் இழந்து நிற்கின்றது என்பது உண்மை.

வெளிநாட்டில் கல்வி பயிலும் தங்கள் பிள்ளைகள் மற்றும் உறவுகளுக்கு கல்விக்கான நிதியை அனுப்பி வைத்தல் போன்ற மிக அத்தியாவசியத் தேவைகளுக்கு இங்கிருந்து வங்கிகள் மூலமாக சட்ட ரீதியாக பணத்தை அனுப்பி வைக்கப் பெற்றோரும் உறவினர்களும் முயலும் சமயத்தில் கூட போதிய அந்நிய செலாவணிக் கையிருப்பைக் கொண்டிராத அரசுத் தரப்பு அதறகான மார்க்கத்தை வழங்க முடியாது கைவிரித்த சமயங்களில் இத்தகைய உண்டியல் முறைகளே மக்களுக்குப் பேருதவி செய்து ஆபத்பாந்தவனாக விளங்கின என்பதும் மறுக்கற்பாலதல்ல.

அரசு எதிர்பார்க்கும் அந்நிய செலாவணி ஈட்டத்திற்குப் பாதிப்பாக இருப்பது இந்த உண்டியல் முறைமை என்பது உண்மை. இந்தப் பின்புலத்தில் நிதி சிறத்தன்மையை உறுதிப்படுத்தவும், சட்டவிரோத பணப் பரிமாற்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும், நிதி மோசடிகளை தடுக்கவும், உண்டியல் மற்றும் ஹவாலா உள்ளிட்ட முறைசாரா பண பரிமாற்ற முறைகளை ஒழுங்குபடுத்த இலங்கை மத்திய வங்கி இப்போது நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்று கூறப்படுகிறது

இத்தகைய முறைசாரா, நம்பிக்கை அடிப்படையிலான பணப் பரிமாற்ற முறைகள், தெற்காசியா மற்றும் மேற்கு ஆசியாவில் பொதுவானவை. அவை வேகம் மற்றும் செலவு குறைவு மற்றும் செயல்திறனை வழங்குகின்றன. ஆனால் வெளிப்படைத் தன்மை இல்லை, பணமோசடி மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றிய கவலைகளை எழுப்புகின்றன. பல நாடுகளின் அரசாங்கங்களும் இந்த அமைப்புகளை ஒழுங்குபடுத்த முயல்கின்றன.

நிதி ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும் சட்டவிரோத நடவடிக்கை களைத் தடுப்பதற்கும் முறைசாரா பணப் பரிமாற்ற அமைப்புகளை ஒழுங்குபடுத்து வதற்கான நடவடிக்கைகளை இலங்கையில் நிதி ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது.

ஜனவரி 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் நடைபெற்ற பொது நிதிக் குழுவிற்கு அதிகாரிகள் இந்த விடயத்தை அறிவித்துள்ளனர். உண்டியல் மற்றும் ஹவாலா இயக்குநர்களை மத்திய வங்கியில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், யாராவது புதிதாக செயல்பட விரும்பினால், அத்தகைய நபர்கள் செயல்பாடுகளை நடத்துவதற்கு முன் பதிவு செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டது.

உண்டியல் முறைமையை ஒழுங்குபடுத்தும் அரசின்முயற்சி வெற்றி பெறுமா என்பது இந்த ஆண்டு முடிவிற்குள் தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.





# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மரத்தில் தனித்துப்போட்டி!

## ரவூப் ஹக்கீம் எம். பி. தெரிவிப்பு


**(அபு அலா, எஸ்.எம்.முபீன்)**

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிடும் என்று நேற்று (21) மாலை, “தாருஸலாம்” தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் கொழும்பு மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிசாம் காரியப்பர், எம்.எஸ்.உதுமா லெப்பை, எம்.எஸ்.நழீம், கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் தற்போதைய அரசியல் சூழ்நிலையை மையப்படுத்திக் கலந்துரையாடப்பட்டது. பின்னர், கொழும்பு, தெஹிவலை–கல்கிஸ்ஸ, கோட்டே, மொரட்டுவை, கொலன்னாவ மாநகர சபைகளுக்கும், கொடிகாவத்தை, முல்லேரியா போன்ற பிரதேச சபைகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவை மு.கா தலைவர் அறிவித்தார். அடுத்த கட்ட நடவடிக்கைகளை கட்சி உடனடியாக ஆரம்பிக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# முல்லைக் கடற்கரையில் பட்டத்திருவிழா!

(விஜரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு கடற்கரையில் பட்டத் திருவிழா இடம் பெற்றுள்ளது.

பிரான்ஸில் புலம்பெயர்ந்து வாழும் முல்லைத்தீவு – வட்டுவாகல் கிராமத்தைச் சேர்ந்த உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பட்டத் திருவிழாவில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

விருந்தினர் வரவேற்புடன் தொடங்கிய இந்த நிகழ்வில் விருந்தினர்களால் சிறார்களிடம் பட்டங்கள் கையளிக்கப்பட்டு குறித்த பட்டத்திருவிழா வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக் கப்பட்டது.

இந்த நிலையில் சிறார்கள் முதல் பெரியோர்வரை இணைந்து இந்தப் பட்டம்விடும் திருவிழாவில் பங்கேற் றிருந்தனர்.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்



தீவுமாவட்ட மேலதிக அரச அதிபர் சி.குணபாலன், கரை துறைப்பற்றுபிரதேசசபைச்செயலாளர்திருமதி.இராஜயோகினி ஜெயக்குமார், வட்டுவாகல் அறநெறிப் பாடசாலையின் முதல்வர் அப்புத்துரை செல்வரட்ணம் ஆகியோர் பங்கேற்றனர்.

பெருந்திரளான மக்களும் இந்த பட்டத்திருவிழாவில் கலந்து கொண்டனர்.

# பல்தரப்பினரை ஒன்றிணைத்து சிவில் சமூக அமைப்பு உதயம்

(எம்.ஏ.றமீஸ்)

கடந்த காலத்தில் சிவில் சமூக பிரதி நிதிகளை உள்ளடக்கி காத்திரமான கொள்கை உருவாக்கம் மேற்கொள்ளப்ப டுவதில் தவறிழைக்கப்பட்டமையினால் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை சமூக மட்டத்தவர்களுக்கு ஏற்பட்டது.

அந்த நிலைமையில் இருந்து அனைத்து இன சமூகத்தவர்களையும் மாற்றிக் கொள்ளும் வகையில் புதிதாக சிவில் சமூக அமைப்பான 'இன்குளுட்' எனும் அமைப்பொன்றை உருவாக்கு வதற்கான தேவை எமக்கு ஏற்பட்டது என 'இன்குளுட்' அமைப்பின் செயற் பாட்டாளரும், தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் தெரிவித்தார்.

'இன்குளுட்' அமைப்பின் உதயம் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்க மளிக்கும் நிகழ்வு அமைப்பின் பிரதான ஏற்பாட்டாளர் கலாநிதி றகீப் ஜஃபர் தலைமையில் அட்டாளைச்சேனை தனியார் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சிவில் சமூகம் ஜனநாயகப் பரப்பி



லும், அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுக்கின்றபோது முக்கிய பங்காளிக ளாக நவீன ஜனநாயகத்தின் மூலம் ஆக்கப்பட்டுள்ளது. அரசின் கொள்கை வெளிப்பாட்டின் அடிப்படையில் அனைத்து மக்களையும் இணைத்துக் கொண்டு செயற்படவுள்ளது என்று புதிய அரசு தமது நிலைப்பாட்டை வெளிப்படுத் தியுள்ளது.

அரசின் இவ்வாறான நிலைப்பாட்டி லும் கூட சிவில் சமூகத்தினர் ஒன்று பட்டு அரசை வழிநடத்த வேண்டியதும் அதற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டி யதுமான தேவை உலக அரங்கில் உணரப்பட்டுள்ளது. இந்த நிலைமைக்கு ஏற்றால் போல் இலங்கையிலும் சிவில் சமூகத்தின் செயற்பாடு அமைய வேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் பல்லின மொழி, மத, கலாசார வேறு பாடுகளைக் கொண்ட மக்களை உள் ளடக்கியதான ஓர் நாடு என்பதால் அனைத்து மக்களையும் உள்வாங்கிய தான கொள்கை உருவாக்கச் செயன் முறை என்பது மிக அவசியமான விடய மாக பார்க்கப்படுகின்றது.

நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பின ரையும் ஒன்றிணைத்து மக்கள் நல செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் இந்தச் சிவில் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. சமய, சமூக, பொருளாதார மற்றும் கலாசார சவால் களை தனித்தனி அமைப்பாக நின்று இயங்குவதிலும் பார்க்க அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுவதால் இந்தத் துறைகளில் பாரிய பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ் அமைப்பின் மூலம் சிறுபான் மைச் சமூகத்தினர், புறக்கணிக்கப்பட்ட தரப்பினர், தொழிலாளர்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், சிறுவர்கள் போன்ற பல்தரப்பட்டவர்களின் உரிமை கள், தேவைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் போன்றவற்றில் அக் கறை செலுத்திச் செயற்படவுள்ளோம்.- என்றார்.

# சீரற்ற காலநிலையால் திருமலையில் 208 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்பு!

(அபு அலா)

கடந்த சில நாள் களாக நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலையால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மூதூர், குச்சவெளி, சேருவில, கோமரங்கடவல, மொறவெவ, தம்பல காமம் மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேச செயலகப் பிரவுகளில் 208 குடும்பங்களைச் சேர்ந்த 691 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை 24 வீடுகளும் பகுதியளவில் சேதம டைந்துள்ளன என்று திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக



நேற்று (21) பெறப்பட்ட புள்ளி விவரத் தகவலின்படி மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேரும், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும், சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேரும், கோமரங்கடவல பிரதேச செயலகப் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும், மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 216 பேரும், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் 93 குடும் பங்களைச் சேர்ந்த 260 பேரும், கிண் ணியா பிரதேச செயலகப் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மூதூர் பிரதேச செயலர் பிரிவில் 15 வீடுகளும், சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 5 வீடுகளும், மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் 2 வீடுகளும், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் 2 வீடுகளும் பகுதியளவில்சேதமடைந் துள்ளன என்றும்அவர்மேலும்தெரிவித்தார்.

# துணைவேந்தர் இல்லாமல் இயங்கும் 4 பல்கலைகள்!

(எஸ்.நிதர்ஷன்)

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தராகக் கலாநிதி த.பிரபாகரன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நிய மிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில் பதில் துணைவேந்தர்களுடன் இயங்கும் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கத்தின் பதவிக் காலம் நேற்று 21 ஆம் திகதியுடன் நிறைவ டைந்த நிலையில், துணைவேந்தரின் கடமைகளை ஆற்றுவதற்கு பதில் பிர தித் துணைவேந்தர் கலாநிதி தம் பிராஜா பிரபாகரன் நியமிக்கப்பட் டுள்ளார்.

துணைவேந்தர் பதவிக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் கடந்த வருடம் ஒக்ரோபர் 15 ஆம் திகதி புள்ளிகளை வழங்கினர்.

அவற்றின் அடிப்படையில், முன் னாள் துணைவேந்தர் பேராசிரியர் வல் லிபுரம் கனகசிங்கம் முதல் நிலையிலும், சுகநல விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன், விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவு ரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் ஆகியோர் முறையே இரண் டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றிருந்தனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழ கங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக் கையின் படி, புள்ளிகளின் அடிப் படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டத்தின்படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப் படையில், பேரவையால் முன்மொழியப் பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து, நியமனம் செய்வது வழமையாக இருந்து வந்தது.

எனினும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயகா பதவிக்கு வந்த பின்னர், ஜனாதிபதியால் பல்கலைக்கழகங்க ளுக்குத் துணைவேந்தர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. துணைவேந்தர்க ளின் பதவிக்காலம் முடிவுற்ற பல்கலைக் கழகங்களுக்கு பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவே பதில் துணை வேந்தர்களை நியமித்துள்ளது.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முன் னாள் துணைவேந்தர் பேராசிரியர் திருமதி ஜீ.ஏ.எஸ். ஹினிகதரவின் பதவிக்காலம் கடந்த மாதத்துடன் நிறை வடைந்துள்ள நிலையில், கலாநிதி ஜானக புஸ்பகுமார பதில் துணைவேந் தராகக் கடமையாற்றி வருகிறார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.ரமீ ஸின் பதவிக் காலம் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் நிறைவடைந்துள்ள நிலையில் கலாநிதி ஜானக புஸ்பகுமார பதில் துணைவேந்தராகக் கடமையாற்றி வருகிறார்.

ருஹுணு பல்கலைக்கழகத்தில் இயல்புநிலை பாதிப்புக்குள்ளாகியதை அடுத்து, பல்கலைக்கழகச் சட்டத்தின்படி கல்வி அமைச்சருக்குள்ள தத்துவத்தின் அடிப்படையில், முன்னாள் துணைவேந் தர் பேராசிரியர் சுஜீவ அமரசேனவின் பதவி வெறிதாக்கப்பட்டு அவரது கடமைகளை ஆற்றுவதற்கெனத் தகுதி வாய்ந்த அதிகாரியாக ஆர்.எம்.யூ.எஸ். கே.ரத்நாயக்க பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது, கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தராகக் கலாநிதி தம்பிராஜா பிரபாகரன் நியமிக் கப்பட்டுள்ளார். கிழக்குப் பல்கலைக்கழ கத்துடன், இலங்கையில் பதில் துணை வேந்தர்களுடன் இயங்கும் பல் கலைக்கழகங்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

இதேநேரம், யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தின் வேந்தராக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டிருந்த தகைசார் பேராசிரி யர் சி.பத்மநாதனின் பதவிக் காலமும் நிறைவடைந்துள்ள நிலையில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் நியமனம் குறித்தும் ஜனாதிபதி செயலகத்தால் எந்தவொரு தகவலும் வெளியிடப்பட வில்லை.

இலங்கையிலுள்ள அரச பல்கலைக் கழகங்களுக்குத் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பில் இதுவரை காலமும் பின்பற்றப்பட்டு வந்த நடை முறையை மாற்றுவது குறித்து அரச உயர்மட்டத்தில் ஆராயப்படுவதனாே லயே இந்த இழுபறி நிலை காணப்ப டுகிறது என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.





# கிழக்கு மாகாண ஆணையாளராக பதவி உயர்வு: அஸ்மிக்கு பாராட்டு!

(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் மாகாண ஆணையாளராக அன்மையில் பதவி உயர்வு பெற்ற பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம்.அஸ்மியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பொத்துவிலில் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில், அதன் தலைவர் தொழிலதிபர் எம்.எஸ்.அன்சார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவித் தவிசாளரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான ஏ.பதுர்க்கான், மௌலவி கே.அப்துல் அஸீஸ் , சமூக செயற்பாட்டாளர் ஏ.நசுவுதீன், பள்ளிவாயல் பொருளாளர் இம்ரான் மூசா, ஓய்வு பெற்ற அதிபர் என்.கே.அப்துல் அஸிஸ், பள்ளிவாசல் உபதலைவர் எம்.ஏ.எல்.ஜௌபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது பதவி உயர்வு பெற்ற கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங் களின் மாகாண ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி பாராட்டி கௌரவிக் கப்பட்டார்.




### அட்டாளைச்சேனையில் மேற்கொள்ளப்பட்ட

# 5 கோடி ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களில் மோசடி!

### கேள்வி எழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர்

(அபு அலா )

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் ரணில் விக்ரமசிங்கவால் நடைமுறைப்படுத்துப் பட்ட சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களில் ஒலுவில் – 01, அல்- ஹிரா நகர், ஆலிம் நகர் போன்ற பிரதேசங்களில் 16 கிறவல் வீதிகள் அபிவிருத்தி செய்யும் பணியில் இடம் பெற்ற மோசடிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் கேள்வி எழுப்பினார்.

அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் அட்டாளைச்சேனை



பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிரால் அட்டாளைச்சேனை பிரதேச வீதிகள், வடிகான்கள் அபிவிருத்தி சம்பந்தமாக முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இதுதொடர்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அதன் தகவல்களையும், விளக்கங்களையும், ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆதம்பாவாவிடம் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த அபிவிருத்திகள் தொடர்பில் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையில் எவ்வித அனுமதிகளும் பெறப் படவில்லை என்று தெரிய வந்துள்ளது.

கிறவல் வீதிகளுக்கு மேலால் மீண்டும் கிறவல்களைப் போட்டு மக்கள் வரிப் பணத்தை மோசடி செய்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இந்திய பிரஜையின் பயணப் பொதியை திருடிய சந்தேகநபர் இன்று கைது!

(மஸ்கெலியா)

கொழும்பில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த உடரட மெனிகே ரயிலில் பயணித்த இந்திய பிரஜை ஒருவரின் பயணப் பொதியைதிருடிய சந்தேக நபர் ஒருவர் ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளால் இன்று புதன்கிழமை (22) கைது செய்யப்பட்டு ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

உடரட்ட மெனிகே ரயிலின் மூன்றாவது பெட்டியில் பயணித்த இந்தியப் பிரஜையின் பொதி, இகுரு ஓயா மற்றும் கலபட ரயில் நிலையங்களுக்கு இடையில் காணாமல் போயுள்ளது. இதுதொடர்பில், ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளிடம் அந்த இந்திய பயணி முறையிட்டுள்ளார்.

பாதுகாப்பு அதிகாரிகள், காணாமல் போன இந்திய பிரஜையின் பயணப் பொதியுடன் சந்தேக நபரை கைது செய்து, ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். சந்தேக நபர், மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்றும், அவர் கண்டியிலிருந்து ஹட்டனுக்கு ரயிலில் பயணிக்க அனுமதிச் சீட்டைப் பெற்று இருந்தார் என்றும் தெரிவித்தனர்.






# அம்பாறையில் தொடரும் மழையால் மக்களின் இயல்பு நிலைமை பாதிப்பு!

## வெள்ளக் காடாக விவசாய நிலங்கள்

(வடிவேல் டினேஸ் )

அம்பாறை சேனநாயக்கா சமுத்திர வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் மக்களை அவதாரமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று 21 அதிகாலை முதல் தொடர்ச்சியான கன மழை பெய்து வருகிறது.

அத்துடன் காற்றும் வீசுவதால் மக்களின் அன்றாட வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் பாதுகாப்பு அமைச்சகத்தின் தேசிய பேரிடர் நிவாரண சேவை மையம் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், சம்மாந்துறை, மஹாஓயா, தமன ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய 88 குடும்பங்களை சேர்ந்த 269 நபர்கள் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 06 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

மேலும் இன்று (22) அதிகாலை முதல் இடி முழக்கத்துடன் கூடிய கன மழை பெய்து வருவதால் அம்பாறை மாவட்டத்தின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் மக்களது அன்றாட வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டு கல் ஓயா ஆற்றின் ஊடாக வெள்ள நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் தாழ் நிலப்பகுதிகள் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறு அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு, ஒலுவில், திருக்கோவில் பகுதிகளை சேர்ந்த நூற்றுக் கணக்கான விவசாய நிலங்கள் தொடர் மழை காரணமாக நீரில் மூழ்கியதால் அறுவடை செய்ய முடியாத துர்பாக்கிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.



# கள் விடுதலை மாநாட்டில் 'கள்' அருந்தி சீமான் ஆதரவு

"கள் குடித்து இறந்தவர் இல்லை. புதுச்சேரி உள்பட பல மாநிலங்களில் கள் விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் மட்டும் ஏன் கள்ளுக்கு தடை? "

- இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.



விழுப்புரம் அருகே பூரிக்குடிசை கிராமத்தில் தமிழ்நாடு பனையேறிகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் தமிழ்நாடு கள் இயக்கம் சார்பில் 'கள் விடுதலை மாநாடு' அந்த இயக்கத்தின் தலைவர் நல்லசாமி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில், பா.ஜ.க. துணைத் தலைவர் ஏ.ஜி. சம்பத், வேட்டவலம் மணிகண்டன், பனையேறி பாதுகாப்பு இயத்தத் தலைவர் பாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மாநாட்டின் தொடக்கமாக பெண்கள் கள் பானையை தலையில் சுமந்தபடி ஊர்வலமக எடுத்து வர மாணவிகள் சிலம்பம் சுற்றி வரவேற்றனர்.

தொடர்ந்து பனையேறி ஒருவர் பனைமரத்தில் ஏறி கள் இறக்க, பனை மரத்துக்கு கள் கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டு படையலிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து கள் நன்மையை விளக்கும் விதமாக நிகழ்ச்சிக்கு வந்திருந்த குழந்தைகளுக்கு கள் வழங்கப்பட்டது. தொடர்ந்து அனைவருக்கும் கள் வழங்கப்பட்டது. இந்த மாநாட்டில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்டு, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உரையாற்றுகையில்.

"கள் மது வகையில் வராது. அது நம் உணவு. கள்ளை மதுவென்று நிருபித்தால் 10 கோடி ரூபா பரிசு என்று அறிவித்து வாதிட்டார்கள். கள் விடுதலை போராட்டத்தில் தொடக்கத்தில் இருந்தே நாம் தமிழர் கட்சி துணை நின்று போராடி வருகிறது. மதுவை போதுமென்று சொல்லாமல் அருந்தி மயங்குவார்கள். ஆனால் உணவை மட்டுமே மனிதன் போதுமென்று சொல்வான். அது போலத்தான் கள்ளை போதுமென்று மனிதன் சொல்வான்.

ரஷ்யாவில் வோட்கா போல தமிழனின் தேசிய பானம் கள். கள் என்று சொல்லாமல் அதை பனஞ்சாறு என்றும் மூலிகைச்சாறு என்று சொல்லலாம். கள் குடித்து இறந்தவர் இல்லை. புதுச்சேரி உள்பட பல மாநிலங்களில் கள் விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் மட்டும் ஏன் கள்ளுக்கு தடை? கள் மது என்றால் டாஸ்மாக்கில் விற்பனை செய்யப்படுவது என்ன? என கேள்வி எழுகிறது. எந்த மாநில முதல்வருக்கும் சாராய தொழிற்சாலை கிடையாது. தமிழகத்தை ஆண்ட முதல்வர்களுக்கு சாராய ஆலை உள்ளது. சட்டசபையில் மது விற்பனையை உயர்த்த நடவடிக்கை என பேசுகிறார்கள்.

பொங்கல் பண்டிகையின்போது இரண்டு நாள்களில் 725 கோடி ரூபாவுக்கு மது விற்பனை செய்யப்பட்டுள்ளது. இத்தனை கோடியில் குடிப்பவனுக்கு ஏன் இலவசம்? டாஸ்மாக் வைத்துக் கொண்டு, இளைஞர் நலன், மனிதவள மேம்பாட்டுத்துறை, சுகாதாரத் துறை வைத்திருப்பது வேடிக்கையானது. பொருளாதாரம் தெரியாதவர்களிடம் நாடு உள்ளது. எத்தனை புயல் வந்தாலும் பனை மரம் சாயாது. மண் அரிப்பை தடுக்க மரம் நட வேண்டும். சீமெந்து பூசுவதில்லை. ஒரே நாளில் நூறு வழக்கு வாங்கியவன் இந்தியாவிலேயே நான் ஒருவன் மட்டுமே. எந்த அதிகாரமும் நிரந்தமில்லை. கள் விடுதலைக்காக நாம் தமிழர் கட்சி எல்லா வகையிலும் துணை நிற்கும்." - என்றார்.

# மகா கும்பமேளா 8 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும்

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளா 8 லட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இதுகுறித்து சர்வதேச தொழில்நுட்ப நிறுவனமான என்.எல்.பி. சர்வீசஸ் வெளியிட்ட அறிக்கையில், "பிரயாக்ராஜில் 45 நாள்கள் நடைபெறும் மகா கும்பமேளா 12 லட்சம் தற்காலிக வேலைவாய்ப்பை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 8 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

இந்த தற்காலிக வேலைவாய்ப்புகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான உந்துசக்தியாக மாறியுள்ளது.

மேலும், இந்த கும்பமேளா பிரயாக்ராஜின் வணிகத்தை ஊக்குவிப்பது மட்டுமின்றி அண்டைய பிராந்தியங்களிலும் குறிப்பிடத்தக்க வகையில் வர்த்தகத்தை ஊக்குவிக்கும். குறிப்பாக, சுற்றுலா, போக்குவரத்து, சுகாதாரம், ஐ.டி, சில்லறை வர்த்தகம் ஆகிய துறைகள் கணிசமான பலன்களைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

12 ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் உலகின் மிகப்பெரும் மதத் திருவிழாவான மகா கும்பமேளாவில் 40 கோடி பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்பது உத்த பிரதேச அரசின் மதிப்பீடாக உள்ளது.

# புடின் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்றால் ரஷ்யா மீது பொருளாதார தடை விதிக்கப்படும்

## ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு



இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியா கியுள்ள டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதியை சந்திக்க தயார் என தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் புடின் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்றால் ரஷ்யா மீது கூடுதல் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என மிரட்டல் விடுத்துள்ளார்.

ரஷ்யா போர் குறித்த கேள்விக்கு ட்ரம்ப் பதிலளிக்கையில்,

“நம்மிடம் திறன்மிக்க ஜனாதிபதி ஆட்சியில் இருந்திருந்தால் இந்த போர் தொடங்கி இருக்க வாய்ப்பு இல்லை. நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் உக்ரைனில் போர் என்ற பேச்சுக்கே இடமில்லை. ரஷ்யா ஒருபோதும் உக்ரைனுக்கு படையெடுத்து சென்றிருக்காது. புடின் உடன் எனக்கு வலுவான புரிதல் உள்ளது. அதனால் அங்கு போர் என்பது ஏற்பட்டிருக்காது.

ஆனால், அவர் பைடனை மதிக்கவில்லை. இதை நாம் மிகவும் எளிதாக புரிந்து கொள்ளலாம். அவர் மக்களை மதிப்பது கிடையாது. அதை அவர் ஸ்மார்ட்டாக செய்தார். அதே போல மத்திய கிழக்கிலும் இந்தச் சூழல் ஏற்பட்டிருக்காது.

என்னை எப்போது சந்திக்க வேண்டுமென புடின் கருதுகிறாரோ அப்போது அவரை சந்திக்க நான் தயார். லட்ச கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். நகரங்கள் சிதிலமடைந்து காணப்படுகிறது. இது ஒரு மோசமான சூழ்நிலை. நமக்கு களத்தில் இருந்து கிடைக்கும் செய்திகளை காட்டிலும் உக்ரைனில் கூடுதலான மக்கள் உயிரிழந்துள்ளனர் என்பதே நிஜம். அதற்காக பத்திரிகையாளர்கள் மீது நான் குற்றச்சாட்டு வைக்கவில்லை. அசல் உயிரிழப்பு விவரம் தெரியக்கூடாது என அரசு எண்ணி இருக்கலாம்.

நமது தரப்பில் உக்ரைனுக்கு ஆயுத உதவி வழங்குவது தொடர்பாக விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும். உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் பேசி வருகிறேன். அவர் அமைதியை விரும்புகிறார். இருந்தாலும் இந்த சிக்கலுக்கு தீர்வு காண இரண்டு பக்கமும் பேச வேண்டியுள்ளது. விரைவில் புடின் உடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள உள்ளோம். அவர் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்றால் ரஷ்யா மீது கூடுதல் பொருளாதாரத் தடை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.” - என்றார்.

# டொலருக்குப் பதில் புதிய நாணயத்தை கொண்டுவர முயற்சித்தால் 100 வீத வரி

## ட்ரம்ப் எச்சரிக்கை



அமெரிக்க டொலருக்குப் பதிலாக புதிய நாணயத்தைக் கொண்டுவர முயற்சித்தால் இந்தியா உள்ளிட்ட பிரிக்ஸ் நாடுகளின் பொருள்கள் மீது 100 வீத வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்க டொலரின் முக்கியத்துவத்தைக் குறைப்பது குறித்து எந்த நாடாவது பரிசீலிக்குமானால், அந்த நாட்டு நிறுவனங்கள் இங்கு மேற்கொள்ளப்படும் வர்த்தகத்துக்குக் கூடுதல் வரி விதிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அதிலும் குறிப்பாக, டொலருக்குப் பதில் புதிய நாணயத்தைக் கொண்டுவர முயற்சித்தால் இந்தியா உள்ளிட்ட பிரிக்ஸ் நாடுகள் மீது 100வீத வரி விதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, புதிய நாணயத்தை உருவாக்க மாட்டோம் என்றும், டொலருக்குப் பதிலாக வேறு நாணயத்துக்கு ஆதரவும் அளிக்க மாட்டோம் என பிரிக்ஸ் நாடுகள் உத்தரவாதம் அளிக்க வேண்டும் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலின் இராணுவத் தலைவர் பதவி விலகுவதாக அறிவிப்பு!

காசா பகுதியில் 15 மாத காலப் போரைத் தொடர்ந்து அமலுக்கு வந்த போர் நிறுத்தத்தின் சில நாட்களுக்குப் பின்னர், இஸ்ரேலின் இராணுவத் தலைவர் ஹெர்சி ஹலேவி பதவி விலகுவதாக நேற்று தெரிவித்தார்.

2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி பாலஸ்தீனிய ஹமாஸ் ஆயுததாரிகள் இஸ்ரேல் மீது எல்லை தாண்டிய தாக்குதலை நடத்தியபோது ஏற்பட்ட பாரிய பாதுகாப்புக் குறைபாட்டிற்குப் பொறுப்பேற்று எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி பதவி விலகுவதாக அவர் அறிவித்தார்.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் லெப்டி



னன்ட் ஜெனரல், இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் (IDF) இஸ்ரேல் குடிமக்களைப் பாதுகாக்கும் பணியில் தோல்வியடைந்துவிட்டது.

இந்த பயங்கரமான தோல்விக்கான எனது பொறுப்பு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் என்னை வாட்டுகிறது.

அந்த மன உளைச்சல் எனது வாழ்நாள் முழுவதும் அப்படியே இருக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், ஹமாஸ் மற்றும் அதன் ஆளும் திறன்களை மேலும் சிதைப்பதற்கும், பணயக்கைதிகள் திரும்புவதை உறுதி செய்வதற்கும் இராணுவம் தொடர்ந்து போராடும்.

மேலும், ஆயுதம் தாங்கிய குழுக்களின் தாக்குதல்களால் இடம்பெயர்ந்த இஸ்ரேலியர்கள் தாயகம் திரும்புவதற்கு உதவும் என்று அவர் மேலும் சுட்டிக்கட்டினார்.

ஹெர்சி ஹலேவியின் அறிவிப்புக்கு பின்னர், IDF இன் தெற்குக் கட்டளைத் தலைவரான மேஜர் ஜெனரல் யாரோன் ஃபிங்கெல்மேனும் பதவி விலகுவதாக அறிவித்தார்.

பக்கங்கள் 03

# கனடா முரசு

புதன்கிழமை 22/01/2025

### கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 3 பேர் கைது

றொறன்ரோவில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

றொறன்ரோ பெரும்பாகம் மற்றும் யோர்க்

02▶




# ஒன்றாரியோ மாகாண முதல்வர் அமெரிக்காவிற்கு எச்சரிக்கை

**அமெரிக்காவினால் கனடா மீது வரி விதிக்கப்பட்டால் பதிலடி கொடுக்கத் தயங்கப் போவதில்லை என ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.**

**அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ராம்ப் கனடாவின் ஏற்றுமதிகள் மீது 25 வீத வரி விதிக்கப்படும் என அறிவித்திருந்தார். இந்த வரிவிதிப்பு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டால் அதற்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என போர்ட் தெரிவித்துள்ளார்.**

ட்ரம்ப்பிற்கு வாழ்த்து தெரிவிக்கும் அதேவேளை, வரி விதிக்கப்பட்டால் அதற்கு பதிலடி நடவடிக்கைகளை எடுக்க தயங்கப் போவதில்லை என போர்ட் தெரிவித்துள்ளார். அமெரிக்காவால் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக மற்றும் கட்டணப் போர், சீனா மற்றும் சீன ஆதரவு நிறுவனங்களுக்கு மட்டுமே பயனளிக்கும் எனசுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறான பதிலடி கொடுக்கப்படும் என போர்ட் தனது உரையில் விளக்கவில்லை. எனினும் மத்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடி அமெரிக்காவிற்கு பதிலடி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஓஷாவாவில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் ஒஷாவில் அமைந்துள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என டர்ஹாம் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சென்டர் மற்றும் கிப் வீதிகளுக்கு அருகிலுள்ள ஒரு வீட்டில் இரவு 8 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர் வீட்டிற்குள் சலனமற்றிருந்த நபர் ஒருவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டார் என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர் 76 வயதான

03▶





# ரொறன்ரோவில் பனிப்படர்ந்த பகுதிகளில் நடமாடுவதனை தவிர்க்குமாறு அறிவுறுத்தல்

கனடா - ரொறன்ரோவில் பனிப்படர்ந்த பகுதிகளில் நடமாடுவதனை தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த அறிவுறுத்தலை ரொறன்ரோ பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் ஆஸ்பிரிட்ஜ் விரிகுடாவின் பனிபடர்ந்த பகுதியொன்றில் வாகனம் வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்திருந்துள்ளார்.


பனிக்கட்டிகள் உறுதியானவை போன்று தென்பட்டாலும் அவற்றில் ஆபத்து அதிகம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



பனிப்படலம் எவ்வளவு செறிவானது என்பதை அறிந்து கொள்ளாது அதன் மேல் நடமாடுவது வாகனம் செலுத்துவது மிகவும் ஆபத்தானது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பனி விளையாட்டுக்களில் ஈடுபடும் போதும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு ரொறன்ரோ பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

மேலும், ஆபத்து ஏற்பட்டால் உடனடியாக 911 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.



## கொள்ளைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்தியங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வீடுகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இந்த கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட பல்வேறு பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

ஆபரணங்கள், கைக்கடிகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு பெறுமதியான பொருள்கள் சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்த கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மற்றுமொருவர் தலைமறைவாகியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.



# ஒன்றாரியோ மாகாணத்திலும் கடுமையான குளிர் காலநிலை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் கடுமையான குளிர் கால நிலை நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பிலான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

குளிர் காற்றுடன் கூடிய குளிர்ந்த கால நிலை நாள் சில பகுதிகளில் மறை 40 பாகை செல்சியஸ் அளவிலான குளிரான வெப்பநிலையை உணர நேரிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டொரன்டோவின் பல்வேறு இடங்களிலும் இதே விதமாக கடும் குளிர் நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமையும் கடுமையான குளிர் உடன் கூடிய வானிலையை எதிர்கொள்ள நேரிடும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மிகவும் கடுமையான குளிருடனான வானிலை தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.







## ஓஷாவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரூஸ் ஸ்கார்லெட் என அயலவர்கள் மற்றும் குடும்பத்தினரால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அந்த நபர் பல தசாப்தங்களாக வீட்டில் வசித்து வந்ததாக அயலவர்கள் தெரிவித்துள்ளனர். தீ விபத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்து தொடர்பில் தகவல்கள் இருந்தால் வழங்குமாறு பொது மக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.